மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.01/2024
உள்
அசல் வழக்கு எண்.61/2023
--------

ஆ.பொன்னுத்தாய் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

நா. சோலைச்சாமி
கா.அழகுபெருமாள்
ஜ.சரவணக்குமாரி
சார்பதிவாளர் அவர்கள்
சார்பதிவாளர் அலுவலகம்
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 07.02.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 16.02.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இரா.இரகு அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், 4 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால்,

தாவா அசல் வழக்குரையை மனுவில் கண்டுள்ள விபரப்படி சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி 07.02.2024ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>

1ம் எதிர்மனுதாரர் வாதியின் கணவர் ஆழ்வார்சாமியின் சித்தப்பாவின் மகன் ஆவார். பிராது தபசில் சொத்தானது ஆதியில் போத்தி நாயக்கருக்கு பாத்தியப்பட்டதாகும். அதன்பிறகு மனுதாரருக்கும், எதிர்மனுதாரரின் தாயார் சின்னகெங்கம்மாளுக்கும் பாத்தியப்பட்டு அவர்களது அனுபவத்திலும், ஆளுமையிலும் வைத்து அனுபவித்து வந்துள்ளார்கள். இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் தாயாரான சின்னகெங்கம்மாள் மனுதாரரின் பங்கினை மறைத்து பெயரில் தபசில் சொத்தினை 2வது எதிர்மனுதாரருக்கு 14.06.2000 தேதியன்று கிரைய ஆவண எண்.2709/2000 நிர் ஆக சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன்பிறகு 2ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு 11.11.2013ம் தேதியன்று கிரைய ஆவண எண்.93.51/2013 நிர் ஆக சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். எழுதிக்கொடுத்துள்ளார். இந்நிர் அசல் வழக்கில் தற்பொழுது வழக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் சில இடங்களில் தட்டச்சுப்பிழையாக திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள விபரத்தை மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டுள்ளார்.

பரிகாரத்தில் 11.11.2013ம் தேதியன்று கிரைய ஆவண எண்.9351/2013 நிர் ஆக சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்த கிரைய ஆவணத்தை பொறுத்து மட்டும் செல்லாது என பரிகாரம் கோரப்பட்ட விபரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரிய வந்துள்ளது. அதற்கு முந்தைய ஆவணமான 2வது எதிர்மனுதாரருக்கு 14.06.2000 தேதியன்று கிரைய ஆவண எண்.2709/200 நிர் ஆக சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்த கிரைய ஆவணத்தைப் பொறுத்து பரிகாரம் கோரப்படாத விபரம் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமான ஒன்றாகும். எனவே, மேற்படி தவறுகளை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாகவும்,நியாயமாகவும் இருந்து

வருகிறது. மேற்படி சீர்திருத்தங்கள் செய்வதால் வழக்கின் தன்மையோ, வழக்குமூலமோ எவ்விதத்திலும் பாதிக்கப்படப்போவதில்லை என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனுவில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பா நிரூபிக்க வேண்டியது. 14.06.2000ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை 2ம் எதிர்மனுதாரருக்கு மேற்படி மனுதாரரும், சின்னகெங்கம்மாள் ஆகிய இருவரும் கூட்டாக கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். தற்போது மனுதாரர் அதனை மறைத்து வழக்கு மூலமே இல்லாமல் நீதிமன்ற நடவடிக்கைகளையும், சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி அசல் வழக்கையும் இந்த மனுவையும் தாக்கல் செய்துள்ளார். மேலும், 14.06.2000ம் தேதிய ஆவண எண்.2709/2000ஐ செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டிய பரிகாரத்தை வழக்குரையில் சேர்க்க வேண்டும் என்று மனுவில் கோரியுள்ளார். மேற்படி பரிகாரம் காலாவதி சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பரிகாரத்தை அசல் வழக்கில் கேட்கவே முடியாது என்பதாலும், வழக்குரையில் சீர்திருத்தம் செய்வதற்கும் எவ்வித நியாயமான காரணங்களும் அபிடவிட்டில் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) **<u>4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்/வாதி தாக்கல் செய்தள்ள மனுவில் குறுந்தலைப்பில் பெயர்களுக்கு வரிசை எண்கள் வழங்கப்படவில்லை. மேலும், 4ம் எதிர்மனுதாரரை

கட்சியாக சேர்த்துள்ளதால் அரசை கட்சியாக சேர்த்து மனு தாக்கல் செய்யவில்லை. அதுகுறித்த தாவா மனுவில் சீர்திருத்தம் செய்ய கோரவில்லை. மேலும், தாவா மனுதாரர் சீர்திருத்தம் செய்யக்கோரும் விபரம் குறித்து தெளிவின்மையாக கூறி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் விளம்புகை பரிகாரம் கோரியும், சீர்திருத்தம் செய்ய கோரியுள்ளார். அதற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தக் கோரும் பரிகார விபரமும் தாவா மனுவில் குறிப்பிடக் கிடையாது. மேலும், விளம்புகை செய்யக்கோரும் ஆவண எண்.2709/2000 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்யாததற்கான காரணமும் தெரிவிக்கக் கிடையாது. அதனால் தாவா மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

8) **<u>தீர்வு</u>**:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர் தரப்பில் தட்டச்சுப்பிழை சில இடங்களில் ஏற்பட்டுள்ளதாகவும், அதை திருத்தம் செய்ய வேண்டும் என மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்களை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்துள்ளார். ஒரு வழக்கைப் பொறுத்து ஏற்பட்டுள்ள தட்டச்சுப் பிழையை சீர்திருத்தம் செய்ய வேண்டியதும், அதற்காக வாய்ப்பு அளிக்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும். எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள பிழைகள்

தட்டச்சுப்பிழை கிடையாது என்றோ, இந்த சீர்திருத்த மனு அனுமதிக்கப்படும்பட்சத்தில் வழக்கின் தன்மையை மாற்றிவிடும் என்றோ மறுத்து நிரூபிக்கவில்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்குரையை மனுவில் கண்டுள்ள விபரப்படி சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி 07.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுவில் சொல்லப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் குறித்து வழக்கு விசாரணையின்போது மட்டுமே முடிவு செய்ய முடியும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா அசல் வழக்குரையை மனுவில் கண்டுள்ள விபரப்படி சீர்திருத்தம் செய்துகொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி 07.02.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA
Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.